# හැම සිසුවකුටම වෘත්තීය පුහුණුවක්

# Vocational Training to Every Student

# மாணவர்கள் யாவருக்கும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி



BKT 0169
23/08/2023
ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# හැම සිසුවකුට ම වෘත්තීය පුහුණුවක්

## කෑගල්ල ශාන්ත ජෝසප් බාලිකා මහා විද්‍යාලයයේ නව ගෘහස්ථ ක්‍රීඩාංගනය විවෘත කිරීමේ උත්සවයේ දී ජනාධිපති ශ්‍රීමත් ආර්. ප්‍රේමදාස මැතිතුමා පැවැත්වූ කථාව

## 1990. 07. 27

කෑගල්ලේ ශාන්ත ජෝසප් බාලිකා විද්‍යාලයට අප පැමිණුණ දෙවෙනි අවස්ථාව යි මේ. මට මතක යි, චන්ද්‍රා රණතුංග ඇමතිතුමා ගේ දියණියත් මේ විද්‍යාලයේ ඉගෙන ගත්ත කාලෙ, ත්‍යාග ප්‍රදාන උත්සවයකට මට පැමිණෙන්නට අවස්ථාවක් ලැබුණා. අද තමුන්නාන්සේලා ගේ ගෘහස්ථ ක්‍රීඩාංගනය විවෘත කරන අවස්ථාවටත් අපට පැමිණෙන්නට ලැබීම ගැන මා ඉතා සතුටු වෙනවා.

පාසලකට යන හැම අවස්ථාවක ම අප යම්කිසි පාඩමක් ඉගෙනගන්නවා. දැන් මේ අවස්ථාවෙත් තමුන්නාන්සේලා ගේ විදුහල්පතිනිය අපට හොද පාඩමක් කියා දුන්නා. බහුකාර්ය ගොඩනැගිල්ලක් හදාගැනීමේ වටිනාකම එතුමිය අද අපට උගන්වා තිබෙනවා. මේ හදපු ගොඩනැගිල්ල ගෘහස්ථ ක්‍රීඩා සදහා පමණක් නො වෙයි, වෙනත් කාර්යයක් සදහා, එ නම් රැස්වීම් සදහා, විභාග ශාලාවක් සදහා, පන්ති පැවැත්වීම සදහා යනාදි වශයෙන් පාවිච්චි කරන්න පුළුවන්. ඒ නිසා මේ විදියට කල්පනා කිරීම විශේෂ දක්ෂකමක්. අලුත් අලුත් අදහස් කල්පනා කරලා ඒ අනුව ක්‍රියා කිරීම, තමන් ගේ සිතුම් පැතුම් ඒ සදහා යොමු කිරීම දක්ෂතාවයේ සලකුණක්.

තමුන්නාන්සේලා ගේ විදුහල්පතිනිය හැටියට ශීලා රත්නායක මැතිනිය, ඒ නිසා අප කාටත් වැදගත් පාඩමක් උගන්වා තිබෙනවා. තමන් ගෙ තිබෙන අඩුපාඩුකම් ගැන කියකියා ඉන්නෙ නැති ව, සංදේශ

ලියන්නට කාලය මිඩංගු කරන්නේ නැති ව, ඒ කාලය එතුමිය සැලැස්මක් හදන්න ක්‍රියා කළා. ඒ ගැන උනන්දුවක් ඇති වුණා පලාත් සභාවේ මන්ත්‍රී ජාලිය වික්‍රමරත්න මහතාට. එතුමා ධෛර්යය දුන්නා. රුපියල් ලක්ෂයක් දෙන්නම් කියා පසුව දෙ ලක්ෂයක් දුන්නා. එහෙම ධෛර්යය දුන්නේ මෙ තැන නිර්මාණශීලී ප්‍රයත්නයක් තිබුණු නිසා.

එහෙම නැත්නම් පෙත්සමක් ලියමින්, සංදේශයක් ලියමින් පලාත් සභාවෙන් හෝ රජයෙන් ආධාර ඉල්ලුවා නම් අපට ශෘහස්ථ ක්‍රීඩාගාරයක් සඳහා රුපියල් විසි ලක්ෂයක් දෙන්නයි කියා, කවදාවත් කවුරුවත් එයට උනන්දුවෙන්නේ නැහැ. ඒ සංදේශය පලාත් සභා මන්ත්‍රීතුමාට දුන්නත්, ලක්ෂ දෙකක් තබා ශත දෙකක් වත් දෙන එකක් නැහැ. එහෙම ආධාර කළේ එතැන නිර්මාණශීලී ගුණයක් තිබුණු නිසා. ඊට ධෛර්යය දුන්නා. ඒ වැඩපිළිවෙළ රජයේ ප්‍රතිපත්තියක්. කම්මැළියන් තවත් කම්මැළියන් කරන ආධාර ක්‍රමය අප දෙන්නේ නැහැ. මීට පස්සෙ. යම් කෙනකු නිර්මාණශීලී ව වැඩ කරන්න ඉදිරිපත් වෙනවා නම්, ඒ අයට අප උදව් කරනවා. ඒ ප්‍රතිපත්තිය අනුව තමයි ජාලිය වික්‍රමරත්න මන්ත්‍රීතුමා මෙ ධෛර්යය දී තිබෙන්නේ. ඒ ගැන මා එතුමාට ප්‍රශංසා කරනවා.

විදුහල්පතිනිය ගෙන් අප පාඩම් ඉගෙන ගන්නවා නම, එහෙනම් මේ විද්‍යාලයේ ගුරු දෙගුරුතුන් ශිෂ්‍යාවනුත් කිසි ම සැකයක් නැතුව මීට වඩා හොඳ පාඩම් ඉගෙන ගන්නවා ඇති. කො තැනකට ගියත්, කවුරුන් හමු වුණත් යම් කිසි පාඩමක් ඉගෙනගන්න ඕන, ආදර්ශයක් ලබන්න ඕන. හොඳ දෙයක් දැක්කොත්, දක්ෂතාවක් තිබ්බොත් එය අනුගමනය කරන්න ඕන. එය වඩාත් වැඩි දියුණු කරන්න අප හැකියාව ඇතිකරගන්න ඕන. පාසලේදී අපේ ගුරුවරු ඒ විධියට දරුවන් ධෛර්ය ගන්වන්න ඕනෑ. දරුවකු නිර්මාණශීලීත්වයට පත් කරන්න ඒ පංතියේ ගුරුවරයා ගේ, ඒ පාසලේ ආචාර්ය මණ්ඩලයේ විශේෂ යුතුකමක්. හැම ශිෂ්‍යයකුම, හැම ශිෂ්‍යාවක්ම හැම දේකට ම ධෛර්යය නොවන්නට පුළුවනි, උනන්දු නොවන්නට පුළුවනි, දක්ෂතාවක් නොදක්වන්න පුළුවනි. එහෙත් මොකක් හරි විෂයයක් සම්බන්ධයෙන් දක්ෂතාවක් ඇති, උනන්දුවක් ඇති. ඒක හොයාගන්න ඕන. හැම ශිෂ්‍යයකු ගැන ම, ශිෂ්‍යාවක ගැන ම පන්තියේ ගුරුවරයා, විශේෂ උනන්දු ඇසකින් බලනවා නම් පුදුම විදියේ ගෞරවයක් ඇති වෙනවා.

මා ඉගෙන ගත්තා කාලෙ පන්තියක ශිෂ්‍යයන් 35කට අඩු ව යි හිටියේ, ශාන්ත ජෝශප් විද්‍යාලයේ. අපට හිටියා පන්තිය භාර ගුරුවරයෙක්. ඒ ඒ විෂයයන්ට වෙන වෙන ම ගුරුවරු ආවා. පන්තිය භාර ගුරුවරයා

විෂයයත් එකක් දෙකක් පමණ යි අපට කියා දුන්නේ. නමුත් ජීවිතය පිළිබඳ පාඩම එතුමා ගෙන් අප ඉගෙනගත්තා. ඇතැම් විටක ගිහි ගුරුවරයෙක්, එහෙම නැත්නම් පැවිදි ගුරුවරයෙක්, ඒ කියන්නෙ කතෝලික පියතුමෙක්.

ඒ පන්තියෙ හැම ශිෂ්‍යයකු පිළිබඳ ව ම ලිපි ගොනුවක් එතුමා ළඟ තිබුණා. ඒ හැම ශිෂ්‍යයකු ගේ ම හැකියාවන් ඔනෑ එපාකම්, ගතිගුණ ඒ ගුරුවරයා දැනගෙන හිටියා. පෞද්ගලික ව ඒ ශිෂ්‍යයාගේ දෙමව්පියන් හා සබඳතාවක් ඒ ගුරුවරුන් ඇති කරගත්තා. බොහෝ විට හමු වුණා. ඒ විදියේ ශිෂ්‍යයන් පිළිබඳ ව සෙනෙහසකින් උනන්දුවකින් ක්‍රියා කළා. හරියට දෙමව්පියන් වාගේ, ඇතැම් විට දෙමව්පියන්ටත් වඩා ඒ ගුරුවරුන් ශිෂ්‍යයන් කෙරෙහි විශේෂ සැලකිල්ලක් දැක්වූවා.

## ගුරු දෙවිවරු

එක ශිෂ්‍යයකු වත් අප්‍රයෝජන ශිෂ්‍යයකු හැටියට සැලකුවේ නැහැ. පෙන්නුම් කරදුන්නා නිතර ම ඒ ඒ ශිෂ්‍යයා ගේ වැඩි ගෙන එන හපන්කම් මොනවාද, කියා. එයා යොමු කෙරුවා ඒ පැත්තට. උනන්දු කෙරුවා. නිතරම කියා දුන් දෙයක් තමයි, තමා ඉගෙන ගන්නා භාෂා ශාස්ත්‍රය, විද්‍යා, කලා ශිල්ප ඇතැම් විට තමා ගේ අනාගතයට උපකාර නුණොත් වෘත්තීය වශයෙන් තමන් ගේ ජීවිකාව ගෙනයෑමට යම් ශිල්පයක් ශිල්පීය දැනුමක් ඇතිකරගන්න උනන්දු කෙරුවා. ගායනය, වාදනය, සංගීතය, නැටුම, චිත්‍ර ඇඳීම, මූර්ති ශිල්පය වාගේ විෂයන් ගැන වුණත් ශිෂ්‍යයන් පෙළඹෙව්වා. ඇතැම් ශිෂ්‍යයන්ට කිව්වා, ඔහු තුළ නිසර්ගයෙන්ම හැකියාවක් තිබෙනවා කාර්මිකකරණයට, ඒ ඔස්සේ ගමන් කරන්න බලන්න විද්‍යා ශාස්ත්‍ර පිළිබඳ ව උනන්දුවක් තිබෙනවා, භාෂා ශාස්ත්‍ර, සාහිත්‍යය, ඉතිහාසය, භූගෝලය, ඒ වගේම පර්යේෂණ ගැන, කෘෂිකර්මය ගැන, කාර්මික පර්යේෂණ ගැන ඒ නිසා ඒ අංශයෙන් උනන්දු වන්න ආදී වශයෙන් තමන් භාරයේ ඉන්නා ශිෂ්‍යයා යොමු කෙරුවා. එතුමා නිතරම කියූ දෙයක් තමයි අධ්‍යාපනය අවසන් වුණා ම අනාථ නොවන තත්ත්වයකට පත් විය යුතු යි කියන එක. ඇතැම් ශිෂ්‍යයන්ට කිව්වා, " හැම විෂයයක් ගැන ම ඉගෙනගන්න කාලය නාස්ති කරන්න එපා, මූලික අවශ්‍යතා දැනුම ලබාගන්න, ඔබ දක්ෂ ක්‍රීඩාවට, ඒ නිසා වැඩි කාලයක් ගත කරන්න ක්‍රීඩාවට. ඒ ගැන උපන් හැකියාව තිබෙනවා" යනුවෙන්. ඇතැම් දෙමාපියන් තම ළමයි ක්‍රීඩාවට යොමුවනවාට කැමැත්තක් නැහැ. එහෙම කිව්වාම දෙමව්පියන් ගෙන්වනවා, ඇතැම් විට දෙමව්පියන් අමනාප වී යනවා

ගුරුවරුන් සමග. ඉන්පසුව දෙමව්පියන්ට කියා දෙනවා මේ ක්‍රීඩාව මාර්ගයෙන් ජීවිතය සාර්ථක කරගන්නා හැටි. කවදාවත් ඉන් වරදින්නේ නැහැ ඔහුට. ඒ නිසා එක් එක්කෙනාගේ හැකියාවන් හඳුනාගන්න. ඒ අනුව ක්‍රියා කරන්න. ශිෂ්‍යයන් තුළ විශාල ශක්තියක් ඇති වෙනවා. එහෙම අයට තමයි ගුරු දෙවිවරු කියා කියන්නෙ.

සමාජය ගැන හැඟීමක් ලබා දෙන්න බොහෝ විට ගුරුවරයාට තමයි පුළුවන් වෙන්නෙ. අහිංසක කියන ශිෂ්‍යයා අංගුලිමාල කෙනකු කළෙත් ගුරුවරයෙක්. බොහො ම හොඳට හැදිච්ච, හික්මුණු ළමයෙක්. නම දැම්මෙත් අහිංසක කියලා. ගුරුවරයාට බොහොම ගක්තිමත් ව ඉගෙන ගත්තා. ගුරුවරයා අහිංසක ව නොමග හැරියා. අන්තිමේ දී හැම කෙනකු ගෙ ම ඇඟිලි කපන මහා මිනීමරුවකු බවට පත් කළා. ඒක කළේ ගුරුවරයෙක්. එහෙව් අංගුලිමාල නැවතත් සුමගට හැරෙව්වෙත් ගුරුවරයෙක්. බුදුරජාණන් වහන්සේ. ඒ නිසා ගුරුවරුන්ට පුළුවනි, එක්කෝ මිනීමරුවන් බිහිකරන්න, එහෙම නැත්නම් ශ්‍රේෂ්ඨ වීරවරයන් බිහිකරන්න. ඔය ත්‍රස්තවාදී වැඩවලට හසු වී භාර වුණු තරුණ තරුණියන්, හිරභාරයට ගත්තු තරුණ තරුණියන්, යමහරු සාමාන්‍ය පෙළේ දක්ෂතා දක්වපු අය, උසස් පෙළේ දක්ෂතා දක්වපු අය, සම්මාන ලබා ගත් අය. මා ඒ අය සමග පෞද්ගලික ව කතා කර තිබෙනවා. ඔවුන් නොමග ගිය ආකාරය ගැන සොයා බලන විට ඒක කෙරවළේ ගුරුවරයෙක් ය කියා කෙනෙක් ඉදල තිබෙනවා. හැම ගුරුවරයෙක් ම එහෙම නොවෙයි, නමුත් ඇතැම් තැන අපේ දරු දැරියන් නොමග යවා තිබෙනවා. ඒක මේ අද ඊයේ වෙච්ච දෙයක් නො වෙයි, බුදුරජාණන් වහන්සේ ගේ කාලයේ ඉඳන් වෙච්ච දෙයක් කියලයි මා කිව්වෙ. ශ්‍රේෂ්ඨ ගුරුවරු නොමග ගිය අය සුමගට හරවනවා. අවවාදයෙන් නො වෙයි, ආදර්ශයෙන්.

මට තාමත් මතකයි, මා ගුරුවරයා දෙස බලාගෙන මා හිතපුවා. අප බොහෝ විට ගුරුවරයා විවේචනය කරනවා. අපට කියනවා සිගරැට් බොන්න එපා කියලා එයා පන්තියෙන් පැනලා ගිහින් සිගරැට් බීල එනවා. අපට කියනවා මත්පැන්වල ආදීනව, එයා හැම අවස්ථාවකම මත්පැන් පාවිච්චි කරනවා. අපට කියන විදියට නොවෙයි ජීවත්වෙන්නෙ. ශිෂ්‍යයා නිතරම ගුරුවරයා දිහා බලන්නෙ.

නමුත්නාත්සේලා ගේ විද්‍යාලයේ ආදර්ශවත් ගුරු මණ්ඩලයක් ඉන්නා බව පේනවා. මා තොරතුරු හෙව්වා බැලුවා. ඒ නිසා අපට සතුටු වෙන්න

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

පුළුවන්. එහෙම ගුරුවරු විශාල පිරිසක් අපේ රටේ ඉන්නවා. ගුරු දෙවිවරුන් හැටියට අප සලකන්නෙ.

"100% ක් ම මේ සමාජයේ හොඳ වෙන්න පුළුවන්කමක් නැහැ. 10% ක් වෙන්න පුළුවන් නරක අය. නමුත් 90% ක්ම නරක් වෙන්නට හොඳ නැහැ.

දවසක් මා එක විද්‍යාලයකට හදිසියේම ගියා. යන කොට ඒ විද්‍යාලයේ තාප්පයක් කැඩිලා තිබුණා. එතනින් පැනල යන කොට පන්තිකාමරයක් දැක්කා. ගුරුවරියන් දෙන්නකු ගහගෙනගන්නා පමණයි, බැණගන්නවා. අර පන්තිවල ළමයි ඔක්කොම මේ දිහා බලාගෙන ඉන්නවා. ලොකු විනෝද ජවනිකාවක්. මාත් ටිකක් වෙලා බලාගෙන හිටියා. ඒ විදියෙ තත්ත්වයනුත් තිබෙනවා. ඒ විදියේ නරක ආදර්ශ දුන්නොත් ඒකෙන් තමන් විතරක් නොවෙයි නරක් කරගන්නෙ, තමන් ගේ නම, තමන් ගේ සිසු පරපුර. මා කිව්වා අපේ ගුරුවරු අවවාදයට වඩා ආදර්ශයෙන් අප හික්මවූ බව. බොහෝ විට අප විසින් කළ යුතු දේ කියන්නෙ නැති ව කෙළින් ම, තමන් කරන පිළිවෙළ. පැහැදිළි කරන්න.

## අවවාදයට වැඩි ආදර්ශය

ඉතින් අපට නිකම් මෙහෙම හිතෙනවා ඇයි අපට මෙහෙම කියන්නෙ. කාලසටහනක් ගැන කතා කරන වෙලාවක මට මතක යි, එක ගුරුවරයකු කිව්වා, ඔය ගොල්ලන්ගේ පන්තියේ කාලසටහන මේක, මගේ කාලසටහන මේක. මා පාසලේ වැඩ ඉවරවෙලා ගියාම මා ටිකක් විවේක ගන්නවා. ඊට පසු ව මා ව්‍යායාමයේ යෙදෙනවා. මා ක්‍රීඩාපිටියට යනවා. මගේ ශරීර සෞඛ්‍යය හොඳට තිබෙන්න ඕන නිසා. මගේ ශරීරයේ ලේ ගමනාගමනය හොඳට තිබෙන්න ඕන. මේ ලෙයින් තමයි මගේ මොළය, හදවත වැඩ කරන්නෙ. හරියට එන්ජිමක් ප්‍රාණවත් කරගන්නවා වාගේ. එක්කෝ මා ඇවිදිනවා. නැත්නම් ක්‍රීඩාපිටියට යනවා. මා ව්‍යායාමයක යෙදෙන්නේ මගේ ශාරීරික වශයෙන් පමණක් නොවෙයි මානසික ව්‍යායාමයකුත් ලබා ගැනීමටයි. ඊට පස්සෙ මා නව ටිකක් විවේක අරන් පාඩම් කරන්න පටන් ගන්නවා. හෙට ළමයිනට උගන්වන්න තිබෙන පාඩම අද මා පාඩම් කරනවා.

මට අද වගේ මතකයි "හෙට ඔයගොල්ලන්ගේ ගුරුවරයා වෙන්න අද අප ශිෂ්‍යයකු හැටියට වැඩ කරනවා, අප ගෙදරදී හෙට ඔයගොල්ලන්ට උගන්වන්න තිබෙන දේ අධ්‍යයනය කරනවා, ලැස්ති වෙනවා, කල්පනා කරනවා අපේ ශිෂ්‍යයන් මේ කාරණය ගැන මොන ප්‍රශ්නයක් ඉදිරිපත්

කරයි ද, මොකක් ද මා දෙන පිළිතුර. මට වඩා දැන උගත්කම් ඇති ගුරුවරයකු ගෙන් අහගන්නවා හෙට පාඩම් සම්බන්ධයෙන් පැන නගින්න ඉඩ තිබෙන ගැටළු ගැන පිළිතුරු. හෙට අදින්න තිබෙන ඇඳුම් පිළියෙළ කර ගන්නවා. සපත්තු මේස් පිළියෙල කර තබනවා." මේ විධියට මේ ගුරුවරයා ගේ සූදානමයි කියන්නෙ.

ඒ ගුරුවරයා කිව්වෙ නැහැ ළමයින්ට මෙහෙම කරන්න අරහෙම කරන්න කියල. ඔක්කොම ගුරුවරයා කරන දේ කිව්වා. ඒ විධියට නොකළොත් කවදාවත් ආදර්ශයක් ඇති කරන්න බැහැ. ගුරුවරයා ආපු වෙලාවේ සිටන්ම අණ දෙනවා නම්, ආඥා පණවනවා නම් ඒක ළමයින්ට මහා කන්දොස්කිරියාවක් වෙනවා. කරන්න කියලා කියන කොට ඒකෙ අනිත් පැත්තමයි ළමයා කල්පනා කරන්නෙ. බලකරන්න කරන්න, වහාම ඇතිවන ප්‍රතික්‍රියාව ප්‍රතිචාරය කරන්නෙ ම නැහැ කියන එකයි. ඒක ස්වාභාවික යි. ආදර්ශය ඊට වඩා ක්‍රියාත්මක වෙනවා.

මා මේවා මෙ තැන දී කිව්වේ මගේ පාඩම් ටිකක් අලුත් කර ගන්න, මතක් කරගන්න. ඒ නිසා මා බොහොම සතුටු වෙනවා තමුන්නාන්සේලා ගේ මේ විද්‍යාලයට දෙ වැනි වරටත් ඇවිත් මේ පාඩම ඉගෙනගන්නට පුළුවන් වීම ගැන.

## පෙර – සූදානම

සූදානම්වීම, බොහෝවිට අපට කියා දී තිබෙන්නේ එකක් වැරදුණොත් තව එකක්, ඒකත් වැරදුණොත් තව එකක් කියන එකයි. විකල්ප තිබිය යුතු යි. මා මේ විභාගයෙන් අසමර්ථ වුණොත් මා කරන්නෙ නැවත සූදානම්වීමක්, මගේ පියා මට කියා දුන්නු පාඩමක් මේක.

මට මතක යි ඒ කාලේ අපේ උත්සවයකට දිවංගත එස්. ඩබ්ලිව්. ආර්. ඩී. බණ්ඩාරනායක ඇමතිතුමා, 1940 දී පළාත් පාලන ඇමතිතුමා ව සිටි කාලෙ, අපේ ශ්‍රී සුචරිත ළමා සමාජයේ රැස්වීමකට අප ආරාධනා කළා. එතුමා එනකොට නිතිකඩයෙක්. ශාලාව අප සැරසිලි කළා. ප්‍රධාන ආරාධිතයා එන කොට මල් වෙඩිල්ල ශබ්ද නගා මල් විසි වෙනවා, සර්වපිත්තල කොළ කෑලි ඔක්කොම විසි වෙනව. එදා රාත්‍රී අපේ පියා මේ ශාලාවට ඇවිත් මේ වෙඩිල්ල හයි කළ එක්කෙනාට කතා කළා. එයාට කියනවා, බැරි වෙලාවත් මේ මල් වෙඩිල්ල අදින කොට මේ නූල කැඩුණ නම් මොකද වෙන්නෙ, මේ මල් වෙඩිල්ල පත්තු වෙන්නෙ නැහැ. ඒක හින්ද දෙන්නෙක් දෙපැත්තෙන් තියල තවත් එකක් හයි කරන්න, එකක්

වැරදුණොත් අනික් එක පත්තුවෙයි. දෙක ම පත්තු වුණොත් තවත් හොඳයි. ඊට පස්සෙ මා ආවම මට මේක කිව්ව. මා තවත් එකක් හයි කෙරුවා. මල් වෙඩි තුන ම වැඩ කලා. මට මතකයි බණ්ඩාරනායක ඇමතිතුමා කිව්වා, යුද්දෙට සැරසෙන වෙලාව ලෝකයේ සමහර පලාත්වල බෝම්බ දමන වෙලාව ඒ. එතුමා කිව්ව මේකත් හරියට බෝම්බයක් වගේ කියලා.

ජනපති ජංගම සේවාවට කෑගල්ලට ආපු වෙලාවෙ තමුන්නාන්සේලා ගේ විද්‍යාලයට තැවතත් පැමිණෙන්නට ලැබීම ගැන මා ඉතාමත් සතුටු වෙනවා. විවේක තිබෙනවා නම් හෙටත් අනිද්දත් කෑගල්ලේ බාලිකා විද්‍යාලයට ගොස් විශේෂයෙන්ම ස්වයං රැකියා අංශය දෙස බලන්න. දේශීය අමු ද්‍රව්‍යවලින් අපේ රජයෙන් දෙන ආධාර උපකාර අනුව තමන්ගේ ජීවිත තිසි විධියට සකස් කරගෙන ඉන්න අය—තරුණ උදවිය, උසස් පෙළ පවා සමර්ථ වූ අය බොහො ම කලකිරී සිටපු අය, කියනවා තමන් බැංකුවක රැකියාවක් කරනවාට වඩා ආදයම් ලබන බව. නොයෙක් ක්‍රම දුන් අප සමාජයට හඳුන්වා දී තිබෙනවා. කිසි ම ළමයකු පාසලෙන් පිට වුණා ම අනාථ නොවන විධියට තමන් ගේ ජීවිතය ගෙනයන්න පුළුවන් ජීවන උපාය මාර්ග ඇති කරන්න. අධ්‍යාපන අමාත්‍යාංශය දැන් විශේෂ උනන්දුවකින් ක්‍රියා කරනවා. කුඩා කල සිට ම හැම ළමයකුට ම වෘත්තීය දැනුමක් ලබා දෙන්න. මොකක් හරි වැඩක් ගැන.

## ප්‍රායෝගික දැනුම

මා එ ද අපේ පුහුණු වුණු ගුරුවරුන් හට ජාතික අධ්‍යාපන ආයතනයේ ඩිප්ලෝමා සහතික දෙන වෙලාවෙ මට මගේ මිත්‍රයකු කී කතාවක් මා කිව්වා. ඇමෙරිකාවේ උසස් අධ්‍යාපනය සඳහා මිත්‍රයාගේ දරුවා යැවූ වෙලාවෙ විශාල දේශීය මුදල් ප්‍රමාණයක් විදේශීය මුදල්වලට හරවා ලොකු ගාණක් ගෙවන්න සිදු වුණා. පාසල් ගාස්තු වශයෙන්, නඩත්තු ගාස්තු වශයෙන්. තමුත් ඒ විශ්ව විද්‍යාලයේ ප්‍රතිපත්තියක් තිබෙනවා. ඒ විශ්ව විද්‍යාලයට ඇතුළු වී ඉගෙන ගන්නා කෙනකු කලා අංශයේ හෝ විද්‍යා අංශයේ හෝ පර්යේෂණ අංශයේ වුණත් කුමක් හෝ වෘත්තියක් පිළිබඳ දැනුමක් ලබා ගත යුතු යි. පැයක් එයට ගතකළ යුතු යි. එහෙම වෘත්තීය දැනුමක් ලබාගන්නට සුදුසු නැත්නම් ඒ ශිෂ්‍යයා ව ඇතුළු කරගන්නෙ නෑ. මේ ශිෂ්‍යයා විද්‍යා දැනුම අතින් බොහො ම සමර්ථකම්

ඇති කෙනෙක්. ඒ වුණත් ඒ විද්‍යාලයේ ප්‍රතිපත්තියක් අනුව ඒ ශාස්ත්‍රීය දැනුම ඇරෙන්න ප්‍රායෝගික දැනුමක් ලබන්න ඕනෑ වුණා. ඒ නිසා ළඟ තිබුණු ගරාජයකට ගියා, රියැදුරකු වගේ පුහුණුවක් ලබන්නට. ඔහුට සිදුවුණා හදිසි ආපදාවකදී ඒ රථය හදාගන්නා ආකාරය පිළිබඳව දැනුමක් ලබන්නට. හොඳට ඩ්‍රයිවින් දැනගත්තා. මෝටර් මිකැනික් ඉගෙනගත්තා. ඉගෙනගත්තා අතර දී ඒ පුහුණුව ලැබුණා. ඒ ශිෂ්‍යයා තම පියාට ලියා එවනවා. "මේ විද්‍යාලයේ ප්‍රතිපත්තියක් නිසා මා ඉගෙනගන්නා අතර සල්ලි හම්බ කරනවා. මට රක්ෂාවක් ලැබී තිබෙනවා. පැය 4ක් මා ඉගෙනගන්නවා. පැය 2ක් සවස් කාලයේ රියැදුරකු සේ සේවය කරනවා. මට උසස් වැටුපක් ලැබෙනවා. ඒ සල්ලිවලින් මට පුළුවන් මගේ ඕනෑ එපාකම් ඉටු කරගන්න. ඒ විතරක් නො වෙයි තාත්තටත් මට කීයක් හරි එවන්න පුළුවන්." මෙ තොරතුරු ඒ පියා දැසේ සතුටු කඳුළු ඇතුව මට කිව්වෙ.

මෙතන කාර්මික දැනුමක් ලබන්න කොයිතරම් මාර්ග තිබෙනවද, ඒවා විස්තර කරන්න උවමනා නැහැ. සමහර විද්‍යාලවල දැන් පරිගණක යන්ත්‍ර ඇති කරගෙන යනවා. විද්‍යාගාර විතරක් නො වෙයි, අධ්‍යාපන ක්‍රමය තුළින් අප පුළුවන්තරම් උත්සාහ කරනවා, ශාස්ත්‍රීය දැනුම ලබා ගන්නා අතර ම ප්‍රායෝගික පුහුණුවක් ලබාදෙන්න. මේ තොරතුරු කිව්වායින් පසු ව නමුත්තාන්සේලා ගේ විදුහල්පතිතිය කියයි මෙ විද්‍යාලයේ ඉගෙනගන්නා එක ශිෂ්‍යාවක් වත් රැකියාවක්, ආදායමක් නැති තත්ත්වයක නොවෙයි. විද්‍යාලයෙන් ඉවත් ව ගිය හැටියෙ කුමක් හෝ ආදායමක් ලබන තත්ත්වයකට පත් කරන්න අප ක්‍රියා කර තිබෙනවා ය කියා. එම උසස් වාර්තාව මට ලැබෙ වා කියා ප්‍රාර්ථනා කරමින් මගේ කථාව මෙයින් සමාප්ත කරනවා.

# கேகாலை புனித ஜோசப் மகளிர் மகா வித்தியாலயத்தின் புதிய உள்ளக விளையாட்டு அரங்கின் திறப்பு விழாவின்போது அதிமேதகு ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை — 1990 . 07 . 27

இன்று நாங்கள் கேகாலை புனித ஜோசப் மகளிர் மகா வித்தியாலயத்துக்கு இரண்டாவது தடவையாக வருகைதந்துள்ளோம். இதற்கு முன்னர் மாண்புமிகு அமைச்சர் சந்திரா ரணதுங்க அவர்களின் அருமைப் புதல்வி, இவ் வித்தியாலயத்தில் படிக்கும் காலத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவொன்றுக்கு வருகைதரும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இன்று உங்கள் உள்ளக விளையாட்டு அரங்கினை திறந்து வைக்கும் இவ் வைபவத்தில் கலந்துகொள்வதை, எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

பள்ளிக்கூடமொன்றுக்கு விஜயம்செய்யும் ஒவ்வொரு தடவையிலும் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு ஏற்படுகின்றது. இன்று இந்த வைபவத்தின்மூலம் உங்கள் கல்லூரி அதிபர் நல்லதோர் படிப்பினையை எங்களுக்குக் கற்றுத் தந்துள்ளார். பல நோக்கங் களுக்காகப் பயன்படுத்தக்கூடிய கட்டிடமொன்றைக் கட்டுவதன் முக்கியத்துவத்தை அவர் எங்களுக்குச் சுட்டிக்காட்டி உள்ளார். இங்கே கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை உள்ளக விளையாட்டுகளுக்கு மட்டுமல்லாமல் கூட்டங்களை நடாத்தும் ஒரு மேடையாகவும் பரீட்சைகளை நடாத்தும் ஒரு மண்டபமாகவும் வகுப்புகளை நடாத்தும் வகுப்பறையாகவும் பல்வேறு பணிகளுக்காகப் பயன்படுத்த முடியும். ஒரு செயலை நிறைவேற்றும்பொழுது இங்ஙனம் எண்ணிப் பார்ப்பது திறமைசாலிகளால் மட்டும் செய்யக்கூடிய சாதனையாகும். புத்தம்புதிய கருத்துகளுக்கேற்ப சிந்தித்துப் பார்க்கும் ஆற்றல் சிறந்த படைப்பாளிகளுக்கு மாத்திரம் உரியதாகும்.

உங்கள் கல்லூரியின் அதிபர் என்றவகையில் திருமதி சீலா ரத்னாயக்கா அவர்கள் எங்கள் அனைவராலும் பின்பற்றக்கூடிய

அரியதோர் செயலை நிறைவேற்றி உள்ளார். தமது குறைகளை எடுத்துரைப்பதற்குக் காலத்தை வீணாக்காமலும் மகஜர்களை எழுதுவதற்கு காலத்தை வீணாக்காமலும் அவர் அந்தக் காலத்தை நல்லதோர் திட்டத்தை வகுப்பதற்குப் பயன்படுத்தி உள்ளார். அவர் வகுத்த அத் திட்டம்பற்றி மாகாணசபை உறுப்பினர் ஜாலிய விக்கிரமரத்ன அவர்கள் அறிந்துகொண்டு அதற்குப் பேருக்கம் அளித்தார். ஒரு இலட்சம் ரூபா தருவதாகக் கூறிய அவர், பின்னர் இரண்டு இலட்சம் ரூபா வழங்கி உதவினார். இக் கட்டிடப் பணியானது புதியது புனைதல் முயற்சியாக விளங்கியபடியால்தான் அவர் அங்ஙனம் உற்சாகமூட்ட முன்வந்தார்.

அங்ஙனம் நடந்து கொள்ளாமல் மகஜர்களை எழுதுவதன்மூலம் மாகாண சபையிலிருந்து அல்லது அரசாங்கத்திடமிருந்து உள்ளக விளையாட்டு அரங்கொன்றைக் கட்டுவதற்காக இருபது இலட்சம் ரூபா கேட்டிருந்தால் எவரும் அதுபற்றி அக்கறை கொண்டிருக்க மாட்டார்கள். அவ்வளவு உற்சாகம் காட்டியிருக்க மாட்டார்கள். அந்த மகஜரை மாகாணசபை உறுப்பினரிடம் கையளித்திருந்தாலும் இரண்டு சதமேனும் வழங்கியிருக்க மாட்டார்கள். புதியது புனைதல் முயற்சியின் விளைவாகத்தான் இப்பணிக்காக பலர் உதவுவதற்கு முன்வந்துள்ளனர். உற்சாகமூட்டுவதற்கும் முன்வந்துள்ளனர். இங்ஙனம் புதியது புனையும் முயற்சிகளுக்கு உற்சாகமூட்டுவது அரசாங்கத்தின் கொள்கையாகும். சோம்பேறிகளை மேலும் சோம்பேறிகளாக்கும் உதவி வழங்கும் திட்டங்களை இதன் பின்னர் நாம் ஆதரிக்க மாட்டோம். புதியனவற்றைப் படைக்கும் ஆற்றல் உள்ளவர்களுக்கு நாங்கள் உதவிசெய்ய எண்ணியுள்ளோம். அந்தக் கொள்கைக்கிணங்கத்தான் மாகாண சபை உறுப்பினர் திரு. ஜாலிய விக்கிரமரத்ன அவர்கள் இம் முயற்சிக்குப் பண உதவிகளை வழங்கி ஆதரித்துள்ளார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்ட விரும்புகின்றேன்.

இக்கல்லூரி அதிபர் எங்களுக்கும் பாடங்களைக் கற்பிக்கக் கூடிய நிலையில் இருப்பாராயின் இக்கல்லூரியில் படிக்கின்ற மாணவிகளும் இக்கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் இந்த அதிபரிடமிருந்து அரிய பாடங்களை கற்றுக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. நாங்கள் எங்கு சென்றாலும் எவரைச் சந்தித் தாலும் சிற்சில பாடங்களையும் முன்மாதிரிகளையும் கற்றுக்கொள்வது

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

அவசியமாகும். நல்லவற்றைக் கண்டவிடத்தும் அருஞ்செயல்களைக் கண்டவிடத்தும் அவற்றை நாங்கள் பின்பற்றுதல் வேண்டும். அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய ஆற்றலை நாங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பாடசாலைகளில் எங்கள் ஆசிரியர்கள் அதற்கு வேண்டிய தைரியத்தை எங்கள் பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டும். சிறாரொருவருடைய படைப்பாற்றல்களை வளர்ப்பது அந்த வகுப்பு ஆசிரியருடையதும் அப் பாடசாலையின் ஆசிரியர் குழாத்தினதும் விசேட கடமையாகும். மாணவர்கள் யாவரும் செயல்கள் யாவற்றிலும் உற்சாகம் காட்டுபவர்களாகவும் அக்கறை கொள்பவர்களாகவும் திறமையுள்ளவர்களாகவும் இருக்க முடியாது. ஆயினும் ஏதோவொரு பாடம்பற்றிய திறமை ஒருவருக்கு இருக்கக்கூடும். அக்கறையிருக்கக் கூடும். அதனை நாங்கள் கண்டறிதல் வேண்டும். வகுப்பு ஆசிரியர் தம் வகுப்பில் படிக்கின்ற மாணவர்கள் அனைவரிடத்தும் விசேட கவனம் செலுத்துவராயின் அத்தகைய ஆசிரியர் அம் மாணவர்கள் யாவரினதும் மதிப்புக்குரியவராக விளங்குவார்.

நான் மாணவராக இருந்த காலத்தில் கொழும்பு புனித ஜோசப் கல்லூரியில் ஒரு வகுப்பில் படித்துக்கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 35 க்குக் குறைவாகவே இருந்தது. எங்கள் வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவர் இருந்தார். அத்துடன், அந்தந்தப் பாடங்களைக் கற்பிப்பதற்கு வெவ்வேறு ஆசிரியர்கள் வகுப்புக்கு வந்தார்கள். வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியர் ஓரிரு பாடங்கள் மட்டுமே எங்களுக்குக் கற்பித்தார். ஆனால் அந்த ஆசிரியரிடமிருந்து வாழ்வாங்கு வாழவேண்டிய முறைகளை நாம் கற்றுக்கொண்டோம். எங்கள் வகுப்பாசிரியராக இருந்தவர்கள் இல்லற வாழ்க்கை வாழ்பவர்களாகவும், துறவற வாழ்க்கை வாழ்பவர்களாக அதாவது கத்தோலிக்க குருமார்களாகவும் இருந்தனர்.

வகுப்பில் படித்த எல்லா மாணவர்களுக்குரிய பெயர்வழிக் கோப்பொன்று அவ்வாசிரியரிடம் இருந்தது. அந்த மாணவர்கள் யாவரினதும் குறைநிறைகள் பற்றியும் தேவைகள் பற்றியும் அந்த ஆசிரியர் அறிந்திருந்தார். தனிப்பட்ட முறையில் அந்த மாணவர்களது பெற்றோருடனும் இவ்வாசிரியர்கள் தொடர்பினைப் பேணி வந்தனர். பெரும்பாலும் அப் பெற்றோர்களைச் சந்தித்தும் வந்தனர். இங்ஙனம்

மிகுந்த தயாள குணத்துடன் மாணவர்களது நலனில் அக்கறை கொண்டிருந்தனர். இந்த ஆசிரியர்கள் அப் பிள்ளைகளது பெற்றோர் களுக்கு நிகராகச் சிலபோது அப் பெற்றோர்களது அன்பினையும்விட கூடுதலான அன்பினையும் மாணவர்களிடத்தில் காட்டி வந்தனர்.

எந்தவொரு மாணவரையும் பயனற்ற மாணவராக அவர்கள் கருதவில்லை. அந்தந்த மாணவரிடத்தில் மறைந்துள்ள ஆற்றல்களைக் கண்டறிந்து அவற்றை வளர்ப்பதற்குத் துணைபுரிந்தார்கள். எப்பொழுதும் உற்சாகம் அளித்தார்கள். மொழிப் பாடங்களிலும் விஞ்ஞானப் பாடங்களிலும் நுண்கலைப் பாடங்களிலும் திறமைகாட்டாத மாணவர்கள் வாழ்க்கைத் தொழிலொன்றின் அறிவினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று எங்கள் ஆசிரியர்கள் எப்பொழுதும் கூறி வந்தனர். எங்களை உற்சாகமூட்டி வந்தனர். பாட்டுப் பாடுதல், இசை மீட்டல், சங்கீதம், நடனம் ஆடுதல், ஒவியக் கலை, சிற்பக் கலை முதலியவற்றில் ஈடுபாடு கொள்ளும்படி மாணவர்களுக்கு மதியுரை வழங்கினார்கள். சில மாணவர்கள் தொழில்துறையில் திறமை கொண்டிருந்தபடியால் அவற்றை வளர்த்துக்கொள்ள வழி காட்டினார்கள். இங்ஙனம் மொழிகளைக் கற்கும் ஆற்றல் கொண்டவர்களை அந்த வழியிலும் இலக்கியம், வரலாறு, புவியியல், கமத்தொழில், தொழிற்றுறை ஆராய்ச்சி முதலியவற்றைக் கற்கும் ஆற்றல் கொண்டவர்களை அந்தந்த வழிகளிலும் செல்வதற்கு வகுப்பு ஆசிரியர்கள் ஊக்குவித்து வந்தனர். எந்தவொரு மாணவரும் பாடசாலைப் படிப்புக்குப் பின் கதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டவராதல் ஆகாதென்று இவ்வாசிரியர்கள் எப்பொழுதும் கூறி வந்தனர். எல்லாப் பாடங்களையும் படிக்க நேரத்தை வீணாக்காமல் அடிப்படையான அறிவினைப் பெற்றுக்கொண்டு தமக்கு விளையாட்டுத்துறையில் திறமையிருப்பின் அதனை வளர்த்துக் கொள்வதற்கு முயல வேண்டுமெனவும் இவ்வாசிரியர்கள் கூறினார்கள். சிலருக்கு விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கக்கூடிய திறமை பிறப்பாற்றலாகவே அமைந்துள்ளது. ஆனால், அத்தகைய சிறார்களின் பெற்றோர்கள், அவர்கள் விளையாட்டுத்துறையில் ஈடுபாடு கொள்வதை விரும்பமாட்டார்கள். அத்தகைய பெற்றோர்களை கல்லூரிக்கு அழைத்து அவர்களுக்குப் புத்திமதி கூறவும் எங்கள் ஆசிரியர்கள் தயங்கவில்லை. சில பெற்றோர்கள் மனமுடைந்து போவதும் உண்டு. தமது பிள்ளைகளுக்கு வேறு பாடங்களைக் கற்பிக்கும்படி வற்புறுத்துவதும்

உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதன்மூலம் வாழ்க்கையில் வெற்றி காணக்கூடிய முறையினை பெற்றோர்களுக்கு எங்கள் ஆசிரியர்கள் விளக்குவார்கள். ஒவ்வொருவருடைய திறமைகளைக் கண்டறிந்து அதன்வண்ணம் செயல்பட்டால் நிச்சயம் வெற்றி பெறலாம் என்று பெற்றோர்களுக்குக் கூறுவார்கள். இங்ஙனம் செயல்படுமிடத்து ஆசிரியர்கள்மீது மாணவர்கள் தீராத அன்பைச் செலுத்தத் தொடங்குவார்கள். அத்தகைய ஆசிரியர்களே குருதேவர்களாக மதிக்கப்படுவார்கள்.

சிறார்களது உள்ளத்தில் சமுதாயம் பற்றிய அறிவை வளரச் செய்பவர் ஆசிரியரே ஆவார். "அகிம்சகன்" எனப் பெயரிய மாணாக்கனை அங்குலிமாலனாக மாற்றியவரும் ஓர் ஆசிரியர்தான். அச் சிறுவன் நல்ல பண்பும் அன்பும் கொண்டவர். அதனாலேதான் "அகிம்சகன்" என்ற பெயரும் சூட்டப்பட்டான். ஆசிரியரிடம் மிகுந்த பக்தியோடு கல்வி கற்று வந்தான். ஆசிரியரே அகிம்சகனைத் தவறான வழியில் இட்டுச் சென்றார். இறுதியில், கண்டவர் யாவரினதும் விரல்களை வெட்டிச் சேகரிக்கும் கொலையாளியாக அவன் மாறினான். அத் தீய வழிக்கு அவனை இட்டுச் சென்றவர் ஆசிரியர் ஒருவர் தான். மகா கொடியோனாக உருமாறிய அங்குலிமாலனை (விரல் மாலை அணிந்தவனை) நல்வழிப்படுத்தியவரும் ஓர் ஆசிரியர் தான். அந்த நல்லாசிரியரின் பெயர் தான் புத்தபகவான்.

எனவே, கொலையாளிகளை அல்லது மாவீரர்களைப் படைக்கக் கூடிய ஆற்றல் ஆசிரியர்களது கையில்தான் உண்டு. பயங்கரவாதச் செயல்களில் தொடர்புகொண்டமைக்காக சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் க. பொ. த. சாதாரண தரத்திலும் உயர் தரத்திலும் திறமைச் சித்திகளைப்பெற்று உள்ளவர்களாவர். அவர்களுடன் நான் தனிப்பட்ட முறையில் அளவளாவியுள்ளேன். அவர்கள் தவறான வழியில் சென்றமைக்கு ஏதுவானவர்கள் யாவர் என ஆராய்ந்த பின்னர் 'ஆசிரியர்' எனப்படும் ஒருவர் இருந்ததாகத் தெரிகின்றது. எல்லா ஆசிரியர்களும் அத்தகையவர்கள் அல்லர். ஆனால், சில ஆசிரியர்கள் எமது சிறார், சிறுமிகளை தவறான வழியில் இட்டுச் சென்றுள்ளனர். இத்தகைய சம்பவங்கள் இன்றோ, நேற்றோ அல்ல புத்தபகவான் வாழ்ந்த காலத்திலும் நடந்துள்ளன. ஆனால், நல்ல ஆசிரியர்கள் தவறான

வழியில் சென்றவர்களை நல்வழிப்படுத்துவார்கள். வாய்வேதாந்தம் பேசாமலே முன்மாதிரியாக நடந்து கொள்வதனால் தவறான வழியில் சென்ற பிள்ளைகளை நல்ல ஆசிரியர்கள் நல்வழிப்படுத்துவார்கள்.

நான் மாணவனாக இருந்த காலத்தில் எனது ஆசிரியனைப்பற்றி எவ்வளவு பயபக்தியோடு இருந்தேன் என்பது இப்பொழுதும் எனது ஞாபகத்தில் வருகின்றது. இன்று நாங்கள் பெரும்பாலும் ஆசிரியர்களை விமர்சிக்கின்றோம். சிகரெட் குடிக்க வேண்டாமென எங்களுக்குக் கூறும் ஆசிரியர்கள் வகுப்பைவிட்டுச் சென்று சிகரெட் குடித்து வருகின்றார்கள். மதுபானம் அருந்த வேண்டாமென எங்களுக்கு உபதேசம் பண்ணும் ஆசிரியர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மதுபானம் அருந்துகின்றார்கள். எங்களுக்கு உபதேசிக்கும் முறையின் படி இவர்கள் வாழமாட்டார்கள். ஆனால், மாணவர்கள் எப்பொழுதுமே ஆசிரியர்களைப்பற்றிக் கூர்மையாக நோக்கிய வண்ணமே இருக்கின்றார்கள்.

உங்கள் கல்லூரியில் முன்மாதிரியான நடத்தையுள்ள ஆசிரியர் குழாமொன்று இருப்பதை நான் காண்கின்றேன். இவ்வாசிரியர்களைப் பற்றி நான் விசாரித்துப் பார்த்துள்ளேன். அவர்களுடைய நேர்மையான நடத்தைபற்றி நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம். இத்தகைய பண்புகளைக் கொண்ட ஆசிரியர்கள் பலர் எங்கள் நாட்டில் கல்வி புகட்டி வருகின்றனர். அத்தகையோரை நாங்கள் குருதேவர்களாக மதித்து வருகின்றோம்.

இந்த சமுதாயத்தில் உள்ளவர்கள் 100 ற்கு 100% நல்லவர்களாய் இருக்க முடியாது. அவர்களிற் 10 சத வீதத்தினர் கெட்டவர்களாக இருக்கலாம். ஆயினும், 90% மானோர் கெட்டவர்களாக இருப்பது நன்றல்ல.

ஒருநாள் நான் ஒரு பாடசாலைக்குத் திடீரென விஜயம் செய்தேன். போகும்பொழுது அப் பாடசாலையின் மதில் உடைந்திருப்பதைக் கண்டேன். உடைந்திருந்த இடத்தினூடாகச் செல்லும்பொழுது வகுப்பறையொன்று என் கண்ணில் பட்டது. இரண்டு பெண் ஆசிரியர்கள் பலமாக வசைமொழிகளைப் பரிமாறிக் கொண்டிருந்தனர். சண்டை எந்த நேரத்திலோ மூளும் என்ற அளவுக்கு சரமாரியாக வசை

மொழிகளைப் பரிமாறிக் கொண்டிருந்தனர். வகுப்புகளில் படிக்கும் பிள்ளைகள் யாவரும் இதனைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். நான் சிறிது நேரம் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நமது பாடசாலைகளில் அத்தகைய பரிதாபகரமான சூழல்களும் உள்ளன. அத்தகைய கெட்ட நடத்தையின் காரணமாக தானும் கெட்டு தனது பெயரும் கெட்டு தனது மாணவர்களும் கெட்டுவிடுகின்றார்கள். எங்களுக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர்கள் உபதேசங்களைவிட முன்மாதிரியான நடத்தையாலே எங்களை நல்வழிப்படுத்தினார்கள். ஒரு விசயத்தை கட்டாயப்படுத்திச் சொல்லாமலே நாங்கள் அதனைச் செய்யும் முறையை விளக்கினார்கள். அந்தக் காலத்து ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குக் கட்டளையிடுவதற்குப் பதிலாக முன்மாதிரியான நடத்தையால் பாடங்களைக் கற்பிக்க ஏன் முன்வந்தார்கள் ? நேரசூசிகை விடயம் சம்பந்தமாக எங்களுடன் பேசிய ஆசிரியர் ஒருவர் நடந்துகொண்ட விதம் இப்பொழுது என் ஞாபகத்தில் வருகின்றது. எங்கள் வகுப்பிற்கு ஒரு நேரசூசிகை இருப்பதைப்போன்று எனக்கும் நேரசூசிகையொன்று இருக்கின்றதென அவர் கூறினார். நான் பாடசாலை வேலைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய பின்னர் சிறிதுநேரம் ஓய்வெடுப்பேன். அதன்பின்னர், தேகப்பியாசங்களைச் செய்வேன். நான் விளையாட்டு மைதானத்துக்குப் போவேன். எனது உடல்நலம் குறையாது இருத்தல் வேண்டும். எனது உடலில் நல்ல இரத்த ஓட்டம் இருத்தல் வேண்டும். அந்த இரத்தத்தினால் தான் எனது மூளையும் இதயமும் இயங்குகின்றன. இயந்திரமொன்று இயங்குவதைப் போன்று அவை இயங்குகின்றன. உடல்நலத்தைப் பேணுவதற்காக உலாவச் செல்லுகின்றேன் அல்லது விளையாட்டு மைதானத்துக்குச் செல்லுகின்றேன். தேகப்பியாசம் செய்வதன் காரணமாக எனது உடல் மாத்திரமன்றி உள்ளமும் உறுதி பெறுகின்றது. அதன்பின்னர், சிறிது நேரம் ஓய்வெடுத்துப் பாடங்களைப் படிக்க ஆரம்பிக்கின்றேன். அடுத்த நாள் மாணவர்களுக்குக் கற்பிக்கவுள்ள பாடத்தை முதல்நாளே ஆயத்தம் செய்துகொள்வேன் என அவர் கூறினார்.

"நான் வீட்டுக்குச் சென்றபின்னர் அடுத்தநாள் உங்களுக்குப் படிப்பிக்க வேண்டிய பாடங்களை ஆழமாகப் படித்து ஆயத்தம் செய்துகொள்வேன். அதாவது அடுத்தநாள் ஆசிரியராகப் பணி புரிவதற்கு அதற்கு முதல்நாள் மாணவராகச் செயல்படுவேன். நாளை மாணவர்கள் இப்பாடம்பற்றி என்னென்ன கேள்விகளை

எழுப்புவார்கள், அதற்கு நான் என்னென்ன பதிலை அளிப்பேன் என்று ஆழமாகச் சிந்தித்து என்னைவிட அறிவுள்ள ஆசிரியர்களையும் கேட்டு அடுத்தநாள் பாடத்திற்காக என்னை நன்றாக ஆயத்தஞ் செய்து கொள்வேன். அதேபோன்று அடுத்தநாள் உடுக்கவேண்டிய ஆடைகளையும் ஆயத்தஞ் செய்து கொள்வேன். சப்பாத்து, மேஸ்களையும் அணிவதற்கு ஆயத்தமாக வைப்பேன் என்று எங்கள் ஆசிரியர்கள் எங்களுக்குக் கூறிய வார்த்தைகள் இன்றும் எனது ஞாபகத்தில் இருக்கின்றன.

அந்த ஆசிரியர் மாணவர்களுக்கு இவ்வாறு செய்யுங்கள், அவ்வாறு செய்யுங்கள் என்று ஆணையிடவில்லை. தான் வாழ்க்கையில் கடைப் பிடிக்கும் நேரசூசிகையைப் பற்றியே குறிப்பிட்டார். ஆசிரியர் வகுப்புக்கு வந்த நேரம்தொட்டு ஆணையிட்டுக் கொண்டே யிருப்பாராயின் அது, பிள்ளைகளுக்கு கண்ணறாவியாகவே தோன்றும். அவ்வாறு நடந்துகொள்ளும் ஆசிரியர்களால் மாணாக்கர்களுக்கு முன்மாதிரி அளிக்கப்படமுடியாது. இதனைச் செய் என்று கூறும்போது சிறுவர்கள் அதனைச் செய்யாமலே இருப்பதற்குத்தான் முயலுவார்கள். பலவந்தப்படுத்தப்படும்போது அதனைச் செய்யமாட்டோம் என்ற தூண்டற்பேறு ஏற்படுகின்றது. அது இயற்கையானது. அதனைவிட முன்மாதிரி சிறந்ததாகும்.

என் பழைய நினைவுகளை இங்கே இவ்வாறு குறிப்பிடுவதற்குக் காரணம் அக்காலத்தில் நான் படித்த பாடங்களை மீண்டும் ஞாபகப் படுத்திக் கொள்வதற்காகத்தான், புதுப்பித்துக் கொள்வதற்குத்தான். எனவே, உங்கள் கல்லூரிக்கு இரண்டாவது முறையாகவும் வருகைதந்து இந்தப் பாடத்தினைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டமைபற்றி நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அந்தப் பாடம்தான் எந்த நெருக்கடியையும் சமாளிப்பதற்குத் தயாராய் இருத்தல் ஆகும். ஒன்று தவறிவிட்டால் இன்னொன்று, அதுவும் தவறிவிட்டால் மேலொன்றுமாக மாற்றுவழிகள் இருப்பது அவசியமென்று எமது ஆசிரியர்கள் கூறியுள்ளார்கள். ஒரு சோதனையில் தோல்வியடைந்தால் இன்னொரு சோதனைக்காக என்னைத் தயாரித்துக்கொள்ள வேண்டுமென எனது தந்தை எனக்கு உபதேசித்துள்ளார்.

முன்னாள் உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களை 1940 ஆம் ஆண்டில் எங்கள் ஸ்ரீ சுசரித்த சிறுவர் சமாஜத்தில் கூட்டத்துக்கு வருமாறு

நாங்கள் அழைத்திருந்தோம். அவர் அப்பொழுது தனிக்கட்டையாக இருந்தார். அந்த மண்டபத்தை நாங்கள் அலங்கரித்தோம். பிரதான விருந்தினர் வரும்போது பூ வெடியொன்றை வெடிக்கவைத்து அவரை வரவேற்பது அக்காலத்து வழக்கமாகும். நாங்களும் ஒரு பூ வெடியை அந்த மண்டபத்தில் பொருத்தியிருந்தோம். விழாவுக்கு முந்திய நாள் இரவில் எமது தந்தை இந்த மண்டபத்துக்கு வந்து அந்தப் பூ வெடியைப் பொருத்தியவரைக் கூப்பிட்டு பின்வருமாறு கூறினார் : ஏதாவதொரு காரணத்தினால் இப் பூ வெடியை இழுக்கும்போது இந்த நூல் அறுந்துபோனால் என்ன நடக்கும். இப் பூ வெடி வெடிக்காது. எனவே, இருபக்கங்களிலும் இரண்டு பூ வெடிகளைப் பொருத்தி விடுங்கள். ஒன்று வெடிக்காது போனால் மற்றையது வெடிக்கும். வெடிகள் இரண்டும் வெடித்தால் மேலும் சிறப்புடையதாகும். இப்படிக் கதைத்துக்கொண்டிருக்கும்போது நான் அந்த இடத்துக்கு வந்தேன். என் தந்தை அந்த விசயத்தை எனக்குக் கூறினார். நான் இன்னொரு பூ வெடியைப் பொருத்தினேன். அந்த மூன்று வெடிகளும் வெடித்தன. இக்காலத்தில் இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. திரு. பண்டாரநாயக்கா அவர்கள் அம் மூன்று பூ வெடிகள் வெடித்த சத்தத்தை அக்காலத்து குண்டுகளின் சத்தத்துக்கு ஒப்பிட்டார்.

ஜனாதிபதி இடம்பெயர் சேவை கேகாலையில் நடாத்தப்படும் இவ்வேளையில் உங்கள் கல்லூரிக்கு மீண்டும் வரமுடிந்தமைபற்றி நான் பேருவகை அடைகின்றேன். உங்களுக்கு வசதியிருந்தால் நாளை, மறுநாள் ஆகிய தினங்களில் கேகாலை மகளிர் வித்தியாலயத்துக்குச் சென்று விசேடமாகச் சுய தொழில் வாய்ப்புப் பகுதியைப் பார்த்து மகிழுங்கள். இந்நாட்டு மூலப்பொருள்களைக் கொண்டு எங்கள் அரசினால் வழங்கப்படும் உதவிகளின் கீழ் தமது வாழ்க்கையினை உரியமுறையில் அமைத்துக் கொள்பவர்கள் அதாவது இளைஞர்கள், உயர்ந்த தரத்திலும் சித்தியடைந்தவர்கள், ஒரு காலத்தில் மிகவும் விரக்தியடைந்திருந்தவர்கள் இப்பொழுது வங்கிச் சேவையில் உள்ளவர்களைவிடக் கூடிய வருமானத்தைப் பெற்றுவருகின்றோமெனக் கூறுகின்றனர். பல சுயதொழில் செய்யும் வழிகளை நாங்கள் இப்பொழுது அறிமுகப்படுத்தியுள்ளோம். பாடசாலைப் படிப்பு முடித்த இளைஞர்கள் யாவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் பாதிப்புக்குட்படாமல் தொழில் புரியக்கூடிய வழிகள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறு வயது

முதல் எல்லாப் பிள்ளைகளுக்கும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி யொன்றை அளிப்பதற்குக் கல்வியமைச்சு இப்பொழுது விசேட கவனம் செலுத்தி வருகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்குத் தேசியக் கல்வி நிறுவகத்தில் டிப்புளோமா வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய போது எனது நண்பர் ஒருவர் எனக்குக் கூறிய செய்தி யொன்றை நான் குறிப்பிட்டேன். எனது நண்பருடைய பிள்ளை ஒருவரை அமெரிக்க நாட்டுக்கு உயர் கல்விக்காக அனுப்பியபோது பெருந்தொகையான இந்நாட்டுப் பணத்தை வெளிநாட்டுப் பணமாக மாற்றிக் கட்டணங்களைச் செலுத்த வேண்டிய நிலையேற்பட்டது. அப்பணம் கல்லூரிக் கட்டணங்களாகவும் பராமரிப்புக் கட்டணங் களாகவும் கட்டப்படவேண்டி இருந்தது. ஆனால் அந்தப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் அவர்கள் படிக்கும் கலைப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு அல்லது ஆராய்ச்சிப் பிரிவு ஆகிய எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் கட்டாயமாக வாழ்க்கைத் தொழில் ஒன்றில் பயிற்சி பெறுதல் வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் அப்பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தகைய தொழிற் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளத் தகுதியற்றவர்கள் அப்பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள். அதுதான் அந்தப் பல்கலைக்கழகத்தின் கொள்கையாகும். எனது நண்பருடைய பிள்ளை விஞ்ஞான அறிவில் சிறந்து விளங்கியவர். எனினும் அக் கல்லூரியின் கொள்கைக்கு ஏற்ப நூலறிவோடு செய்முறை அறிவினையும் பெறுவது கட்டாயத் தேவையாக இருந்தது. எனவே அண்மையிலிருந்த வாகனப் பழுதுபார்க்கும் இடத்தில் சாரதியாகப் பயிற்சி பெறுவதற்கு அந்த மாணவர் சென்றார். அந்த கராஜில் படிக்கும் போது ஒரு மோட்டார் வண்டிக்குக் கோளாறு ஏற்பட்டால் அதைத் திருத்திக் கொள்ளும் அறிவினை அவர் பெற்றார். நன்றாக வண்டிகளை ஓட்டுவதற்கும் கற்றுக் கொண்டார். மோட்டார் பொறியியல் வேலைகளையும் நன்கு பயின்றார். அவர் பல்கலைக்கழக மாணவராகப் படிக்கும் அதே நேரத்தில் அந்தப் பயிற்சியையும் அவர் பெற்றார். அந்த மாணவர் ஒருநாள் தமது தந்தைக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் : இக் கல்லூரியின் ஒரு கொள்கையின் காரணமாகப் படிக்கும் பொழுதே உத்தியோகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. நான் பணத்தைச் சம்பாதித்து வருகின்றேன். நாலு

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

மணிநேரம் நான் கல்வி கற்று வருகின்றேன். மாலை இரண்டு மணிநேரம் நான் சாரதியாக வேலை செய்கின்றேன். எனக்கு நல்ல சம்பளம் கிடைக்கின்றது. அந்தச் சம்பளத்தைக் கொண்டு எனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். அது மட்டுமன்றி அப்பாவுக்கும் பணம் அனுப்பக்கூடிய நிலையில் நான் இருக்கின்றேன். இச் செய்தியை எனக்குத் தெரிவித்த என்னுடைய நண்பரான அத்தந்தையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடுவதை நான் கண்டேன்.

இந்த நாட்டில் தொழினுட்ப அறிவினைப் பெற்றுக் கொள்வதற்காக இருக்கும் வழிகளைப் பற்றி நான் விபரிக்கப் போவதில்லை. சில கல்லூரிகளில் இப்பொழுது கொம்பியூற்றர் பொறிகளும் பொருத்தப்பட்டு வருகின்றன. விஞ்ஞான ஆய்வுகூடங்களுள்ள பாடசாலைகள் பல உண்டு. நூலறிவினைப் பெற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் செய்முறை அறிவினையும் வழங்குவதற்கு எமது கல்வித் திட்டத்தின் மூலம் நாங்கள் இயன்றவரை ஆவன செய்து வருகின்றோம். இத் தகவல் களைக் கேட்டறிந்த பின்னர், இக் கல்லூரியில் படிக்கும் மாணவிகள் யாவருக்கும் கல்லூரிப் படிப்பினை முடித்து வெளியேறியவுடனேயே வருமானத்தைப் பெறக்கூடிய எந்தவொரு தொழிலினையும் பெறு வதற்குத் தகுந்த அறிவினை வழங்கி வருகின்றோம் என இக் கல்லூரியின் அதிபர் அறிக்கையிடக்கூடிய நிலை ஏற்படுவதாக எனக் கூறி எனது உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

# VOCATIONAL TRAINING TO EVERY STUDENT

## SPEECH MADE BY HIS EXCELLENCY R. PREMADASA, THE PRESIDENT ON THE OCCASION OF THE OPENING OF THE IN-DOOR STADIUM OF ST. JOSEPH'S GIRLS SCHOOL, KEGALLE ON 27.07.1990

This is the second occasion I visited the St. Joseph's Girls School of Kegalle. I first came here when Minister Chandra Ranatunga's daughter was studying at this school. I had the opportunity to attend a Prize Giving at the School. Today I am very happy to be here for the opening of your In-door Stadium.

Every time we go to a school, we have the opportunity of learning some lesson. A few minutes back your principal taught us all a good lesson. She taught us the importance of constructing a multi-purpose building instead of a single-purpose one. This new building that has been built can be used not only as an In-door Stadium. It can also be used as an assembly hall, an examination hall and for conducting of classes. It therefore, becomes clear there is very prudent thinking behind this project. It is a great cleverness on the part of a person to be creative in thinking in this manner.

Mrs. Sheila Ratnayake, your School Principal, has done an exemplary job of work. Without being complaining about shortcomings in the school or writing representations about them, she has devoted her time usefully to take some action on her own initiative. The Provincial Council Member Mr. Jaliya Wickremaratne was

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

impressed by this effort of hers. He gave encouragement to her. He promised to give one lakh of rupees and gave two lakhs. He gave such assistance because he observed here some creative effort.

If the School Principal happened to be simply writing representations to the Provincial Council and the Government asking for two million rupees to build an Indoor Stadium, I do not think there would have been any ready response. I do not think that any such representation would have induced the Provincial Council Member to give two lakhs. He helped because there was an effort by the school authorities to help themselves. I must say that it is the policy of the Government also. Hereafter we will not give any assistance which will make a lazy man more lazy. If anybody displays initiative and creativity we will give him a helping hand. That is the policy that Mr. Jaliya Wickremaratne has followed and I thank him for that.

If we who came here casually too found the work of the school principal instructive, we can very well imagine the great opportunity the tutorial staff and the students must be having to learn from the work and guidance of her. Wherever we go, if we see any exemplary cleverness of anybody we must try to draw the necessary lesson and to emulate that person. In the school the teacher must instill this habit and attitude in children. The teacher must encourage the child to use his initiative and to exercise his creative abilities. A child may not be clever at everything. But every child has some aptitude and a capability for something. It is the responsibility of the teacher to discover that talent in the child and help its development along that line. If the teacher adopts this kindly and caring attitude towards his students, he certainly will earn the love and respect of his charges.

At the time I was studying at St. Joseph's College, Colombo, a class invariably had less than 35 students. We had a teacher who was in-charge of the class. There was a different teacher to teach each subject. The teacher in-charge of the class taught us only one or two subjects. This teacher was either a lay teacher or a member of the clergy, that is a Catholic Father.

There was a personal file in respect of every student in the class, with the teacher in-charge of the class. He had an understanding about the talents, capabilities and qualities of character of every student. He also developed a connection with the parents of the child. He in fact very often personally met them. The class teacher had a great personal interest in the welfare of his student and a deep affection for him. Some times the class teacher showed a greater interest in the welfare and development of the child even than the parents themselves.

The teacher did not consider any of his students as incorrigible or good for nothing. He spotted the emerging talents and capabilities of the student and encouraged him to develop them further. One thing he impressed on us always was that the education one receives should in some way help one to find some means of livelihood. He encouraged the children to master technical and vocational skills in addition to the academic subjects they learnt. He emphasized that no child should find himself helpless after his school career. But the class teacher also encouraged the children to study subjects or engage in activities for which they had an aptitude. He pointed out that knowledge and training so acquired would come in useful in later life. For example he encouraged children who were clever at sports to excell in them. But sometimes the parents did not like their children taking to sports in a

serious way. The teacher had the occasion sometimes to summon the parents and explain to them the importance of encouraging children to engage in activities and pursuits for which they had a natural bent. There were occasions when the parents did not appreciate this and were displeased. But the teacher patiently explained to them how the training gained in sports would help people in later life.

It is the teacher who can help most the children to gain an understanding about the society in which they live. The teacher wields great influence. It is the teacher who made an 'Angulimala' out of an innocent student. The name of that child was 'Ahimsaka' meaning innocent. He was a well disciplined child who was very obedient to his teacher. But unfortunately the teacher misled the boy. Ultimately he became a very cruel man who killed men and women to collect human fingers to make a 'Guru Pooja'. Angulimala was misled to take to a path of violence by a teacher. And it was a teacher who again took him over to the path of virtue, namely the Lord Buddha, the supreme teacher. This is a good example of the great influence the teacher can exert over the students. The young men and women who have been taken into custody and detained for engaging in terrorist activity are persons who have done very well in their education. There are persons who have even obtained Distinctions for their performance at examinations. I have personally talked to a good number of them. When you delve into matters to find out how they had gone astray, you find a teacher of a sort at the bottom of it. Every teacher is not like that, but sometimes the teacher has been instrumental in misleading the student. As I told you, this sort of thing has happened even during the time of the Lord Buddha. The great teachers

wean over those who have gone astray on to the path of virtue more by their example than by their precept.

I still remember what I thought of the teacher while I was watching him. We sometimes have the occasion to criticise the teacher. He advises us not to smoke, but he himself sneaks away from the class-room to smoke. He advises us not to take liquor, but he takes liquor at every opportunity he finds. He does not himself live in the way he advises us to live. The student always looks up to the teacher for a model to follow. It is unfortunate if the teacher fails to provide one to the student.

I see that there is an exemplary tutorial staff in your school. I made inquiries about it and I came to know that position and we all can be happy about the situation prevailing here. There is a large number of such good teachers all over the country. It is to such teachers we pay homage as 'Guru Devas'.

It does not seem possible for 100% of the people in a society to be good. It may be that 10% are always bad. But it will be a tragedy if 90% of them become bad. One day I paid a surprise visit to a school. When I went towards a class-room I saw two female teachers engaged in a hot exchange of words. All the children were watching this quarrel. The two teachers were nearly coming to blows and this scene provided much fun to the children who were watching them. This sort of behaviour not only undermines the discipline of the teachers themselves, but also that of the students.

In contrast to this behaviour, one day a certain teacher told me what he did daily as a teacher, not while he is in the class room but when he is at home. He told me how, after

he went home after the school-time, did physical exercise or engaged in sports and games to keep himself physically and mentally healthy.

He also told me how he prepared himself with the lessons he had to take in the classes on the following day. He had, in fact, himself studied like a student while at home in order to be able to take his lessons successfully in the class-room on the following day. He did not have anything very much to say how he ordered about his students or got them to do their lessons. He had only allowed his students to follow his example. That I think is the more successful method.

I told you all this on this occasion because this recollection is helpful to refresh my own memory about my lessons. I am very happy that I had the opportunity to come to this school for the second time and learn a lesson quite instructive to me. Getting ready in advance is very good. But even if with all this preparation we fail, we try again. If we fail the examination once, we get ready for it once more. And the other important thing is we must have alternatives. This is a lesson I learnt from my father.

In 1940, one day, we invited the late Mr. S. W. R. D. Bandaranaike as Chief Guest to a meeting of our Sucharitha Movement. He was at that time the Minister of Local Government and a bachelor. In the evening before the day we decorated the meeting hall to receive him. We hung a confetti cracker above the entrance to the hall to be let-off when the Chief Guest entered the hall. That evening my father came into the hall to see what was being done and, observing the cracker, he called the man who hung the cracker and asked him to have a second cracker also hung so that there would be an alternative one in case the first

one failed to go-off. He has said that if both went off at the expected moment the effect would be still better. When I was told about this arrangement, I fixed up a third one in order to be still more sure! On the arrival of the Chief Guest the strings attached to all the three crackers were pulled and all the three went off with deafning noise! It was the time when the second world war had started and some countries were being bombarded. Hearing the noise of the crackers Mr. Bandaranaike said that he was reminded of the war!

While the Mobile Presidential Service is being conducted at Kegalle I am happy that I got the opportunity to re-visit your school. I invite all of you to go to the St. Joseph's Girls School at Kegalle tomorrow and day-after tomorrow and see specially that section of the Exhibition which demonstrates self-employment opportunities. There are many self-employment projects started by even educated youth with Government assistance. They say that they are quite happy with the results they have achieved and they get an income even larger than a job in a Bank would have given them. Now many avenues of employment are being introduced. Now the Education Ministry is working with keen interest to give vocational training to students so that they will not have to remain without gainful employment after they have left school.

Now, I would like to tell you a small story that I related at the conferment of Diplomas to trained Teachers of the National Educational College. This is a story told me by a friend of mine. He sent his son to a University in America for Higher Education. My friend had to bear heavy expenditure on school fees and as fees for board and lodgings for his son. This University had a policy that any

body entering it for education should possess knowledge and training in some vocation in addition to the Science or Arts subjects he has studied. If any new entrant does not possess that training, he will have to acquire such training prior to enrolment. He therefore had been attached to a near by garage to undergo training as a driver. He also had to study Motor Mechanism and be able to put a vehicle in to working order in an emergency if it suffers a break-down. As a result of this training he became not only a good driver but a Motor Mechanic as well. The youth had written to his father to inform him that he had found employment while learning in the University. While he learnt for four hours in the morning he had worked as a driver for two hours in the afternoon. For this he had been paid a good salary. This income had been enough to meet all his expenses and also to make a little saving. He had informed his father he could even send him some money if he wanted. My friend was really happy about this result.

In our country too there is ample room to acquire Technical and Vocational training by our youth if they so desire. In some schools today even Computer Science is being taught. We are today trying our best to give our youth practical training in some vocation in addition to the academic or scientific knowledge they acquire in school. I am sure your principal too would follow this policy and make it a success in her school so that all boys and girls who are now studying in the school will be assured of some gainful employment immediately after they leave school.

ජනාධිපති ලේකම් කාර්යාලය
26 AUG 2023
පුස්තකාලය